பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 10 சனிக்கிழமை 25.07.2020 கதிர் 129

## வன்னித் தேர்தல் மாவட்டத்தில்

# படை அதிகாரி எம்.பியானால் தமிழரின் இருப்பு கேள்விக்குறி?

## எச்சரிக்கிறார் சார்ள்ஸ் நிர்மலநாதன்



**வவுனியா, ஜூலை 26**

**இராணுவ அதிகாரியொருவரைத் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராக்கினால் எமது இருப்பு கேள்விகுறியாகும்.**

**- இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளருமான சார்ள்ஸ் நிர்மலநாதன். வவுனியா ஈச்சங்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

2

## கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்குக!

**மட்டு ஆயர் கோரிக்கை**

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விசாரணைக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மறை மாவட்ட பேராயர் அதிவண. ஜோசப் பொன்னையா ஆண்டகை தேர்தல் ஆணைக்குழு தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனநாயக நாடொன்றில் பிரஜைகளுக்கு வாக்களிக்கும் உரிமையை மறுப்பது நியாயமில்லை. சிறையில் சாதாரணமாக தடுத்துவைக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளல்லர். அவர்கள் நீதிமன்ற விசாரணைகளுக்காகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும். சிறையில் இருப்பவர்கள் எல்லோரையும் நாம் தண்டனை பெற்றவர்களாகவோ, குற்றவாளிகளாகவோ கருதமுடியாது. அதனை நீதிமன்றமே தீர்மானிக்க முடியும்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை அவர்கள் சாதாரண தடுப்புக் கைதிகள் தான். அவர்களை குற்றவாளிகள் என்று அடையாளப்படுத்த முடியாது. ஆதலால், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படலாகாது. சிறையிலிருக்கும் விசாரணைக் கைதியொருவர்

2

## தப்பிய கொரோனா நோயாளி வீடொன்றில் புகுந்து திருடினார்

கொழும்பு, ஜூலை 25

ஐ.டி.எச் வைத்தியசாலையில் இருந்து நேற்று தப்பிச் சென்ற கொரோனா நோயாளி, தனது பயணப்பாதை தொடர்பாக வழங்கிய தகவல்கள் போலியானவை எனத் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று அதிகாலை ஐ.டி.எச் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றார்.

2

## ஆத்திரமடைந்த தவராசாவினால் வீரசிங்கம் மண்டபத்தில் பரபரப்பு!

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஜூலை 25

மக்கள் மன்றில் உரையாற்றிக் கொண்டிருந்த வடக்குமாகாண முன்னாள் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா கோபமுற்று தனது கையில்இருந்தகோவையை தூக்கி எறிந்ததால் மண்டபத்தில் சிறுது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்சியில் சி.தவராசா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலமும் என்ன செய்து கொண்டிருந்தது போன்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து

2

## கூட்டமைப்பின் கூட்டத்தில் போத்தல்கள் வீசி தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் இனந்தெரியாத நபர்களால் போத்தல் வீசப்பட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுழிபுரம் கல்விளான் பகுதியில் நேற்று இரவு நடந்த கூட்டத்தின்போதே தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும், யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் பேசிக் கொண்டிருந்தபோதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களோடு மக்களாகப் பிரசார கூட்டத்தின் கலந்து கொண்ட சிலர் இந்தத் தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இத்தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

## பலத்த கட்டுப்பாடுகளுடன் நல்லூரானுக்கு கொடியேற்றம்



(எஸ். நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஜூலை 26

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் சமூக இடைவெளியுடனும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி ஆரம்பமானது.

நாட்டில் நிலவும் கோவிட் - 19 இடர் நிலைமையை கருத்தில் கொண்டு நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆரம்பானது.

2






## ஆத்திரமடைந்த தவராசாவினால் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்து தெரிவித்துக்கொண்டிருந்தார். இதன்போது நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சிவகரன் குறுக்கிட்டு 'கூட்டமைப்பினர் எதுவும் செய்யவில்லை, விடுவோம், 20 வருடங்களாகப் பலமான அமைச்சரவையில் இருந்த நீங்கள் எவற்றை செய்தீர்கள்' எனக் கேள்வியெழுப்பினார்.

இதன்போது ஆத்திரமடைந்த தவராசா தான் கருத்து கூறும்போது குறுக்கிடவேண்டாம் எனவும், பக்கச்சார்பாக இருக்கவேண்டாம் எனவும் கூறியதை அடுத்து இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அதனை அடுத்து தவராசா தன் கையிலிருந்த கோவையைத் தூக்கியெறிந்தார்.

அதனால் மன்றில் சில நிமிடங்கள் பரபரப்பு ஏற்பட்டது. அதன்போது ஏனைய பேச்சாளர்கள் அவரை ஆசுவாசப்படுத்தி அமைதியடையச் செய்தனர். பின்னர் மீண்டும் பழையபடி தவராசா தனது உரையைத் தொடர்ந்தார்.

## பலத்த கட்டுப்பாடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களில் முகக்கவசம் அணியாதோர் திருப்பி அனுப்பப்பட்டனர். அத்தோடு நான்கு திசைகளிலும் உள்ள பொலிஸாரின் சோதனைச் சாவடிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமெராக்கள் முன்னால் தங்கள் அடையாள அட்டை சகிதம் நின்று அவர்கள் கமெராவில் பதியப்பட்ட பின்னரே ஆலய சூழலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலும் ஆலய வழாகத்திற்குள் அதிக நேரம் பக்தர்கள் நிற்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் பக்தர்கள் ஆலயத்துக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.

ஆலயச் சூழலில் வியாபார நடவடிக்கைகள், பஜனைகள், அங்கபிரதட்சணம், கற்பூரச்சட்டி எடுத்தல் போன்றனவும் தடைசெய்யப்பட்டு மிக எளிமையான முறையில் மகோற்சவம் இடம்பெற்றது.

ஆலய வழாகத்தில் பொதுமக்களின் வருகை குறைவாக காணப்பட்டதோடு பொலிஸாரைவிட இராணுவப் பிரசன்னம் அதிகரித்து காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## தப்பிய கொரோனா .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாலை 2 மணியளவில் தனது படுக்கையில் தலையணையை வைத்து, போர்வையால் மூடி, ஒருவர் படுத்திருப்பதைப்போல தோற்றத்தை ஏற்படுத்தினார். பின்னர் ஜன்னல் வழியாக இறங்கி, குழாய் வழியாக இறங்கி, மதிலேறி குதித்து தப்பிச்சென்றுள்ளார்.

அவர் முன்னர் வழங்கிய வாக்குமூலத்தில், உறுகொடவத்தை வழியாக நடந்து கிராண்ட்பாஸ் சென்றார் எனத் தெரிவித்திருந்தார். எனினும், அவரை ஏற்றிச் சென்ற ஓட்டோச் சாரதி அளித்த வாக்குமூலம் வித்தியாசமாக இருந்தது.

இதையடுத்து, பொலிஸார், சுகாதாரத்துறையினர், புலனாய்வாளர்கள் அவரது பாதை தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தியதில் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

வைத்தியசாலையிலிருந்து தப்பித்த அவர், வழியில் வீடொன்றிற்குள் நுழைந்து உடைகளையும், சைக்கிளையும் திருடியுள்ளார். தனது உடையை மாற்றிவிட்டு, சைக்கிளிலேயே கோட்டை வரை சென்றுள்ளார்.

அந்த நபர் உடைகளையும், சைக்கிளையும் திருடிய வீடு கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக செய்தித் தொடர்பாளர் மேலும் கூறுகையில், இந்த நோயாளியின் பொறுப்பற்ற நடவடிக்கைகளுக்கு தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## படை அதிகாரி எம்.பியானால் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தம் முடிந்ததன் பின்னர் தலைமைத்துவம் இல்லாத இனமாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கள் பலம், எங்கள் இருப்பு, எங்கள் அடையாளம், மொழி, கலாசாரம் எல்லாவற்றையும் இணைத்துப் பயணிக்க வேண்டிய தேவை உள்ளது. நாங்கள் எங்கள் ஒற்றுமையை நிலை நிறுத்தாவிட்டால் எங்கள் இனம் பெரியதொரு கேள்விக்கு உட்படுத்தப்படுவதுடன் சவாலுக்கும் உட்படுத்துப்படும். இதனூடாக எங்களுடைய தனித்துவம் அழிக்கப்படும். இதற்கான முயற்சிகள் பல ஆண்டு காலமாக எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் தற்போது வன்னியில் கோட்டபாய அரசு இதற்காக பெரும் முயற்சியை எடுக்கின்றது.

இந்தப் பகுதியில் ஓர் இராணுவ அதிகாரியை அல்லது சிங்களவர் ஒருவரை வன்னி மக்களால் தெரிவு செய்வதற்காக முயற்சிக்கின்றது.

2019 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு எங்கள் பிரதேசத்தில் உள்ள இராணுவத்தினருக்கு வித்தியாசமான தைரியம் கிடைத்துள்ளது, இராணுவத்தினர் முன்பிருந்ததைபோல் அல்லர். எங்கள் மக்களை வஞ்சிக்கின்ற - அடக்கி ஆள நினைக்கின்ற-முழுமையான செயற்பாட்டுக்கு இராணுவம் வந்துள்ளது.

இன்று பல துறைகளிலும் இராணுவத்தினருக்கு பதவிகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இராணுவத்தினரைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நோக்கத்திலேயே வன்னியிலும் இராணுவ அதிகாரியொருவர் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக களம் இறக்கப்பட்டுள்ளார்.

அந்த இராணுவ அதிகாரி வன்னியில் வெற்றி பெற்றால் எங்கள் இனத்தின் இருப்பு என்ன ஆகும் என்பதைச் சிந்தித்து பாருங்கள். எங்களுடைய பிரதேசத்தில் இராணுவத்துடன் சம்பந்தமில்லாத பல விடயங்களுக்கு இராணுவம் சம்பந்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

எமது மக்கள் விவசாயம் செய்த காணிகளில் தற்போது விவசாயம் செய்ய விடாமல் இராணுவம் தடுத்து வருகின்றது. இராணுவம் எந்த நிர்வாகத்தில் ஈடுபடுவது என்ற நிலை இல்லாமல் போய்விட்டது.

எனவே எங்களுக்குள்ள ஆபத்தை தெரியாமல் நாங்கள் பிரிந்து நின்றால் எமக்கு பெரும் ஆபத்து வந்து சேரும். எனவே நாங்கள் ஒரே அணியாக இருக்க வேண்டும்.

எனவே நாம் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்காவிட்டால் அது சிங்கள அல்லது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரையே கொண்டுவர வழிவகுக்கும். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்கள் மக்கள் நலன் சார்ந்து பிரியவில்லை. அவர்களது செயற்பாடு தன்னலம் சார்ந்த, சுயநலம் சார்ந்த செயற்பாடாகவே இருக்கின்றது.

சார்ள்ஸ் நிர்மலநாதனுக்கு முன்னால் வந்து கதைக்க முடியாமையால் எவரும் என்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வருகின்றனர் இல்லை. எங்கள் இனத்தின் தனித்துவத்திற்காக நான் உழைத்தவன். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் நாடாளுமன்றத்தில் எமக்குள்ள பலத்துக்கு அமைய மக்கள் நலன் சார்ந்த செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். எனவே மக்கள் எமக்கான பலத்தை அதிகரிக்க வேண்டும் - என்றார்.

## கைதிகளுக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்வரும் நாடாளுமன்றக் தேர்தலில் வேட்பாளராக நிற்கிறார். அதே நேரத்தில், அதே சிறையில் அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இதனை தேர்தல் ஆணையாளர் கவனத்தில் எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை


ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மரபுரடிமை வடிவில் வரும் ஆக்கிரமிப்பு ஆக்ரோஷம்

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்டுள்ள இலங்கை அரசு, இப்போது அதிலிருந்து வெளிப்படையாகவே பின்வாங்கியுள்ளது.

'இலங்கை முழுவதும் முழு இலங்கையரினதும் தாயகம்' என்ற பொதுமைப் பண்புக் கோட்பாட்டை முன்வைக்கும் ராஜபக்ஷக்கள், இலங்கைத் தீவில் எந்த ஒரு தனியான பிரதேசமும் தனியாக ஓரினத்தின் தாயகமே அல்ல என்று கூறி வருகின்றனர்.

2005 இறுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தில் இருந்தே இதுதான் அவர்களின் நிலைப்பாடு.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரான இந்த நிலைப்பாடு குறித்து புதுடில்லி இதுவரை எதிர்ப்போ, ஆட்சேபனையோ வெளியிடாமல் மௌனம் சாதிப்பதன் மூலம் ராஜபக்ஷக்களின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றதோ என்ற சந்தேகம்.

வடக்கும், கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டை சிதறடிப்பதற்காக மரபுரிமை ரீதியாக அப்பிரதேசங்களில் பௌத்த, சிங்களத்துக்கும் உரிமையுண்டு என்று காட்ட விளைவதில் மிகத் தீவிரமாக இருக்கின்றது சிங்களம்.

தென்னிலங்கையின் பௌத்த, சிங்களத் துறவிகள் – பிக்குமார் – அண்மைக் காலமாகத் தெரிவித்து வரும் கருத்துகள், அதையொட்டி நாட்டின் ஜனாதிபதியும், அதிகார வர்க்கமும் எதிரொலித்து வரும் நிலைப்பாடுகள் அதனைத்தான் எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன.

இவ்வாறு மரபுரிமை ரீதியான ஆக்கிரமிப்பிலும் பௌத்த, சிங்களம் முனைப்புக் காட்டத் தொடங்கியுள்ளது. ராஜபக்ஷக்களின் புதிய ஆட்சியில் இந்தப் போக்கு இப்போது வீறு கொள்ளத் தொடங்கியிருக்கின்றது.

இந்த மரபுரிமையைப் பாதுகாத்தல், தொல்பொருள்களைப் பேணுதல் என்ற பெயரில் இப்போதுதான் கொழும்பு அரசினதும் பௌத்த, சிங்களத் தலைமைகளினதும் போக்கு வீரியமும் எழுச்சியும் கொண்டிருக்கின்றது.

கிழக்கில் தொல்பொருள்களைப் பேணுதல் என்ற பெயரில் விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றை, நேரடியாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ், தனித்து பௌத்த, சிங்களவர்களை மட்டும் கொண்டு – குறிப்பாக வடக்கும், கிழக்கும் கூட சிங்கள தேசமே என்ற நிலைப்பாட்டை வலிமையாகப் பிரதிபலித்து நிற்கும் தீவிரப் போக்கு பௌத்த தேரர்களைக் கொண்டு – ஜனாதிபதி கோட்டாபய அமைத்தபோதே இது விடயத்தில் புதிய ராஜபக்ஷ அரசின் நிலைப்பாடு யாது என்பது துலாம்பரமாகத் தெரிய ஆரம்பித்து விட்டது.

அந்த வரிசையில் இது தொடர்பில் ஜனாதிபதி பௌத்த ஆலோசனைச் சபையின் 4 ஆவது கூட்டம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

இக்கூட்டத்தில் பிரதானமாக, தொல்பொருள்களைப் பாதுகாத்து தேசிய மரபுரிமைகளை உறுதி செய்வதற்கு தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை திருத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டமையுடன் அதில் ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்தியிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

அந்த ஆலோசனைகளில் முக்கியமானது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொடர்பில் உள்ள வழக்குகளைக் கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு மகாசங்கத்தினர் தெரிவித்த கோரிக்கையாகும்.

இக்கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிக்கும்படி ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியிருக்கின்றார் என்று தெரிகின்றது.

கன்னியா வெந்நீரூற்று போன்ற விடயங்களில் வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களும், நீதிபதிகளும் நீதியுடனும், தற்றுணிபுடனும், நேர்மையுடனும் செயற்படுகின்றமையைச் சகிக்க முடியாமல் பௌத்த, சிங்களத் தீவிரப் போக்கு பிக்குகள் அந்த நிலைமையை முறியடித்து, நீதித்துறையைத் தமக்குச் சார்பாக மாற்றும் கைங்கரியமே இந்த ஆலோசனையாகும்.

இதனை நேரத்துடன் ஊகித்து அறிந்து கொண்டமையினால்தான் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், மரபுரிமை மற்றும் தொல்பொருள் தொடர்பான சகல அம்சங்களும், அதிகாரங்களும் மாகாணங்களுக்குப் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

காணி உரிமை, பொலிஸ் அதிகாரம் போன்றவை போல தொல்பொருள் பேணல், மரபுரிமையைக் காப்பாற்றுதல் போன்ற அதிகாரங்களும் பாரதீனப்படுத்தப்படாமல் மாகாணங்களிடமே இருக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி, அதில் உறுதியாக நிற்க வேண்டும். அதனையே பௌத்த, சிங்களத்தின் ஆக்கிரமிப்பு ஆக்ரோஷம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.



# முதுகெலும்புள்ள வேட்பாளர்களை கண்டறிந்து வாக்களிக்க வேண்டும்

## தமிழ், முஸ்லிம் மக்களிடம் மனோ கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25

ஆளும்கட்சியோ, எதிர்க்கட்சியோ முதுகெலும்புள்ள, துணிச்சலுள்ள, நாட்டின் ஜனாதிபதி முதல் பிரதமர் வரை நேருக்கு நேர் நின்று கேள்வி கேட்கக்கூடிய, எமது மக்களின் அபிலாஷைகளையும், துன்பங்களையும் சிங்கள மொழியில் தேசிய அரங்குகளில் எடுத்து வைக்கக்கூடிய, ஆங்கில மொழியில் சர்வதேச அரங்குகளில் எடுத்துக்கூறக்கூடிய வேட்பாளர்களைக் கண்டறிந்து அவர்களின் கட்சி சின்னத்துக்கும், அதன் பின் அந்த வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலங்கங்களுக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவரும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:–

சஜித் தலைமையிலான அரசை அமைக்கவே நாம் போராடுகின்றோம். அந்த நம்பிக்கை எமக்கு நாளுக்கு நாள் வலுக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்றுவது ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களின் நோக்கமாக இருக்கலாம். கூட்டணிக்காரர்களான எமக்கு அது வல்ல நோக்கம். எமது நோக்கம், அலரிமாளிகையைக் கைப்பற்றுவதாகும். அங்கே பிரதமர் ஆசனத்தில் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாஸவை அமரச் செய்வதாகும்.

எது எப்படி இருந்தாலும் ஆளும்கட்சியோ, எதிர்கட்சியோ இந்த நாட்டில் ஜனநாயகரீதியாக சண்டைபோட வேண்டிய இடத்தில் சண்டையிட்டு, அழுத்தம் திருத்தமாக எமது மக்களின் அபிலாகைளுக்காக நிமிர்ந்து நின்று குரல் கொடுக்கக்கூடிய வேட்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களைத் தெரிவு செய்ய வேண்டியது தமிழ், முஸ்லிம் மக்களின் கடமை.

நேர்மை உள்ள, தூரப்பார்வை உள்ள, அர்ப்பணிப்பு உள்ள, துணிச்சல் உள்ள, பன்மொழி அறிவு உள்ள, விலை போகாத வரலாறு உள்ள, சொந்த இனப்பற்று உள்ள, சகோதர இன, மதங்களின் மீது மரியாதை உள்ள, உண்மையான தேசப்பற்றுள்ள வேட்பாளர்கள் யார் என்பதைக் கண்டறியுங்கள். இதைக் கண்டறிவது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. உங்கள் முன் வரும் வேட்பாளர்களைக் கொஞ்சம் கவனமாக ஒவ்வொருவராக அவதானித்துப் பார்த்தால் உண்மை அடையாளத்தை அறியலாம். எக்காரணம் கொண்டும் இதைக் கண்டறிய தவறிவிட்டீர்கள் என்றால், அடுத்து ஐந்து வருடங்கள் உங்கள் வாழ்க்கை கேள்விக்குறியாகி விடும்.

இதை நான் இன்று எனது மாவட்டமான கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு மாத்திரம் கூறவில்லை. நாடு முழுக்க வாழும் தமிழ் பேசும் இந்து, இஸ்லாம், கத்தோலிக்க தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் சொல்கின்றேன். ஆகஸ்ட் ஐந்தாம் திகதிக்குப் பிறகு இதைச் செய்ய முடியாது. இப்போதே உங்கள் தீர்மானங்களை எடுங்கள் –என்றார்.

# பிள்ளைகள் இல்லாத நரேந்திர மோடி மஹிந்தவைவிட ஆளுமையற்றவரா?



## மங்கள சமரவீர கேள்விக்கணை

அண்மைக்காலத்தில் எமது நாட்டின் அரசியல் வாரிசுகளின் தரத்தையும் தகுதியையும் பார்க்கும்போது, குழந்தை இல்லாதவராக இருப்பதென்பது எதிர்காலத்தில் சிறந்த அரசியல் தலைவர்களின் உருவாக்கத்திற்கு உதவக்கூடிய முக்கிய நேர்மறை விடயமாக அல்லவா கருதப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுத்தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜலனி பிரேமதாஸவின் மகப்பேற்றுச் சுதந்திரத்தை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் அண்மைக்காலமாக சமூகவலைத்தளங்களில் கண்டனங்கள் வெளியிடப்பட்டு வந்தன.

அதேவேளை. மஹிந்த ராஜபக்ஷவின் கருத்தைக் கண்டிக்கும் விதமாக சர்வதேச ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புபவர்களை ஊக்குவிக்கும் 'சேன்ஜ்' என்ற பிரபல சிவில் அமைப்பின் ஊடாக சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் ஐ.நாவுக்கு அனுப்பிவைப்பதற்காக 'பெண்களின் மகப்பேற்றுச் சுதந்திரம் என்பது அரசியலுக்கான ஓர் ஆயுதம் அல்ல என்பதைப் பிரதமருக்குச் சொல்லுங்கள்' என்ற தலைப்பில் மகஜர் ஒன்றைத் தயாரித்துள்ளார். அதில் சுமார் 500 பேர் வரையில் கையெழுத்திட்டுள்ளனர்.

அதுமாத்தரமன்றி தனிநபரொருவரின் மகப்பேற்றுச் சுதந்திரத்தை அரசியல் பரப்புரை மேடைகளில் பேசுபொருளாக்குவதைக் கண்டித்து பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. இத்தகையதொரு பின்னணியிலேயே மங் கள சமரவீரவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கருத்தைக் கண்டனம் செய்யும் வகையில் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

'குழந்தைகள் இல்லாமையின் காரணமாக நரேந்திர மோடி மஹிந்த ராஜபக்ஷவை விடவும் தகுதி குறைந்த தலைவரா? அண்மைக் காலத்தில் எமது நாட்டின் அரசியல் வாரிசுகளின் தரத்தையும் தகுதியையும் பார்க்கும் போது, குழந்தை இல்லாதவராக இருப்பதென்பது எதிர்காலத்தில் சிறந்த அரசியல் தலைவர்களின் உருவாக்கத்திற்கு உதவக்கூடிய முக்கிய நேர்மறைவிடயமாக அல்லவா கருதப்பட வேண்டும்?' – என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



> **இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது? ஏன் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரி மையின் அடிப்படையிலான தீர்வு அவசியம் என்ப வற்றை சிங்கள மக்கள் விளங்கிக் கொண்டு நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கு அவர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்பதற்காகவே சர்வதேச விசா ரணையை நாம் கோருகின்றோம்.**



# தமிழர் உரிமையை வழங்க மறுப்பது ராஜபக்ஷக்களின் போக்கிரித்தனம்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் விசனம்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று வல்வெட்டித்துறையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் கூறியவை வருமாறு :-

ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்கு மிகச் சொற்ப நாள்களே உண்டு. அன்று நீங்கள் யாவரும் தவறாது வாக்களிக்கச் செல்ல வேண்டும். அரசாங்கம் ஆங்காங்கே படையினரைக் குவித்து வைத்துள்ளது. மக்கள் வாக்களிக்கச் செல்லாவிட்டால் அரசாங்கத்திற்குக் கொண்டாட்டம். தமது அடிவருடிகளை வெல்லச் செய்துவிடுவார்கள். ஆகவே தவறாது நேர காலத்திற்குச் சென்று மீன் சின்னத்திற்கு வாக்களித்து வாருங்கள்.

இன்று முதற்கண் உங்கள் ஊடாக எமது தமிழ் மக்களுக்கு இரண்டு விடயங்களைக் கூற விரும்புகின்றேன்.

ஒன்று - இன்று என்னை வந்து சந்தித்து என்னிடம் ஆங்கிலத்தில் நான் எழுதிய எனது ஒரு பழைய கேள்வி - பதில் கட்டுரை சம்பந்தமாகப் பொலிஸார் விசாரணை செய்தமை. இரண்டு - அண்மையில் பிரதம மந்திரி தாம் பிரபாகரன் கேட்டதை எழுத்தில் தர முடியாது என்று கூறியமை பற்றியது..

கொழும்புத் தலைமையகப் பொலிஸாரின் பணிப்பின் பேரில் இன்று பொலிஸார் என்னிடம் சென்ற வருடம் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆங்கிலத்தில் எழுதிய கேள்வி - பதில் கட்டுரை சம்பந்தமாகக் கேள்வி கேட்டார். அதை எழுதியது நான்தான் என்று கேட்டு அதன் உள்ளடக்கம் பற்றி உரிய தொலைக்காட்சி மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது என்றும் பொலிஸாருக்குப் பல முறைப்பாடுகள் வந்துள்ளன என்றும் அவர் அறிவித்தார்.

அவர் குறிப்பிட்ட கேள்வி - பதில் என் காரியாலயத்தில் பதிவு செய்திருந்த படியால் அதன் பிரதி ஒன்றை வந்தவரிடம் வழங்கி அதை வெளியிட்டவர் நான்தான் என்று கூறி அதன் உள்ளடக்கம் நான் எழுதியவை என்றும் அது பற்றிக் கேள்விகள் வேண்டுமானால் கேட்கலாம் என்றும் கூறினேன். அவர் குறித்த ஆவணத்தைத் தான் கொழும்புக்கு அனுப்பப் போவதாகவும் உள்ளடக்கம் பற்றிய கேள்விகள் தமக்குத் தரப்படவில்லை என்றும் கூறினார். அதனால் தாம் அதைக் கொண்டு போய் உயர் அதிகாரிகளுடன் பேசித் திரும்பவும் வருவதாகக் கூறினார்.

நான் பதில் அளிக்க என்னிடம் கேட்கப்பட்ட கேள்வி பின்வருமாறு இருந்தது.

'மலையக தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் மற்றைய சமூகங்களுடன் கைகோர்த்துச் செல்லும் போது வடக்கு கிழக்கு மக்கள் மட்டும் பிரிந்து நிற்பதற்குக் காரணம் என்ன?

அதற்குப் பதிலாக நான் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் தனித்தவம் பற்றிக் கூறி நாம் தொடர்ந்து சரித்திர காலத்திற்கு முன்பிருந்து வடக்கு கிழக்கை எமது பாரம்பரிய வாழ்விடங்களாகக் கொண்டிருப்பதையும், பௌத்தம் முதன் முதலில் தமிழர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டதென்றும், அப்போது சிங்களமொழி வழக்கத்திற்கு வந்திருக்கவில்லை என்றும் அம்மொழி கி.பி. 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டளவில்தான் மொழியாகப் பரிணமித்தது என்றும் பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தேன். சிங்களவருக்குத் தவறான வரலாறு அவர்கள் பற்றி அவர்களுக்கு புத்த பிக்குகள் போன்றவர்களால் போதிக்கப்பட்டு வந்துள்ளது என்றும் கூறியிருந்தேன்.

நாங்கள் ஒரு பாரம்பரியத்தை, நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதால் நாம் எமது வடக்கு, கிழக்கில் சுயாட்சி கேட்டுள்ளோம் என்றும் எமது பாரம்பரிய மற்றும் மனித உரிமைகள் எமக்குக் கையளிக்கப்பட்டால் மற்ற இனங்களுடன் கைகோர்த்துப் பயணிப்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றும் அதில் கூறியிருந்தேன். வந்த பொலிஸார் மேலிடத்துடன் தொடர்பு கொண்ட பின்னர் வருவதாகக் கூறிச் சென்றார்கள்.

நான் எழுத்தில் அனுப்பி, சென்ற டிசெம்பர் மாதத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த கேள்வி - பதில் பற்றி ஏழு மாதங்களின் பின்னர் தேர்தலுக்கு முன்னர் பொலிஸாரை அனுப்பிக் கேட்டமை விந்தையாக உள்ளது. தமிழ் மக்களை வெருட்டிப் பணிய வைக்கலாம் என்று அரசாங்கம் நினைத்தால் தயவு செய்து உங்களின் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள் என்று மாண்புமிகு ஜனாதிபதியிடமும் மற்றையவர்களிடமும் கேட்டு வைக்கின்றேன். இவ்வாறான செயல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று தெரிந்து கொண்டே நான் அரசியலுக்குள் நுழைந்தேன். ஒரு வேளை சம்பந்தரின் அரசியலை நடத்தியிருந்தால் என்னை எவரும் கேள்வி கேட்க வந்திருக்கமாட்டார்கள். ஆனால் நான் மக்களுடன் சேர்ந்திருப்பவன். எனது இணக்க அரசியல் மக்களுடன்தான். ஆகவே தப்பாக எங்களை மதிக்காதீர்கள் என்று அரசாங்கத்தினரை

> **இரண்டாவதாக மஹிந்தர் ஒரு விடயத்தை மனதில் வைத்திருக்க வேண்டும். வடக்கு, கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தம்மை தாமே ஆள்வ தென்பது அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் ஒரு சட்ட உரித்து. சர்வதேசச் சட்டப் படி வடக்கு, கிழக்கு மக்கள் சுய நிர்ணய உரிமை கொண்டவர்கள். அதைக் கொடுக்க வேண்டியது மஹிந்தரின் கடப்பாடு. தமிழ் மக்க ளின் உரிமைகளை நாம் தரமாட் டோம் என்று அவர் கூறுவது ஒரு விதப் போக்கிரித்தனமான கூற்று.**

நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து மாண்புமிகு மஹிந்த அவர்களின் கூற்றுப் பற்றி. பிரபாகரன் தனி நாடு கோரியமை பற்றியும் நாங்கள் சமஷ்டி கோருவது பற்றியும் அறியாமலா மஹிந்த அவர்கள் அரசியலில் 50 வருடங்கள் கழித்துள்ளார்? சட்டக் கல்லூரியில் பிரிவினை பற்றியும் சமஷ்டி பற்றியும் எவரும் உங்களுக்கு எடுத்துச் சொல்லவில்லையா?

இரண்டாவதாக மஹிந்தர் ஒரு விடயத்தை மனதில் வைத்திருக்க வேண்டும். வடக்கு, கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தம்மை தாமே ஆள்வதென்பது அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் ஒரு சட்ட உரித்து. சர்வதேசச் சட்டப் படி வடக்கு, கிழக்கு மக்கள் சுய நிர்ணய உரிமை கொண்டவர்கள். அதைக் கொடுக்க வேண்டியது மஹிந்தரின் கடப்பாடு. தமிழ் மக்களின் உரிமைகளை நாம் தரமாட்டோம் என்று அவர் கூறுவது ஒரு விதப் போக்கிரித்தனமான கூற்று. அப்படிக் கூறினால்தான் சிங்கள மக்கள் வாக்களிப்பார்கள் என்றால் பதவிக்கு வந்தபின் உங்கள் கூற்றுக்களை மாற்றிக் கொள்வீர்களா என்று அவரிடம் கேட்க விரும்புகின்றேன்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வினை காண்பதற்கு நாம் முன்வைக்கும் யோசனைகள் சர்வதேச சட்டங்களுக்கு அமைவானவையாகவும் முரண்பாட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவானவையாகவுமே இருக்கின்றன. இவை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெற்றிகரமாகப் பிரயோகிக்கப்பட்ட நடைமுறையில் இருக்கும் வழிமுறைகளே. தமிழ் மக்களின் அடையாளத்தையும் இருப்பையும் அழிப்பதையே குறியாகக்கொண்டு செயற்படும் இலங்கை அரசு ஒரு போதும் தமிழ் மக்களுக்கு தீர்வு எதனையும் வழங்கப் போவதில்லை என்பதையும் சர்வதேச உத்தரவாதம் இன்றிய எந்த உடன்படிக்கையையும் இலங்கை அரசு மதிக்கப்போவதில்லை என்பதையும் யுத்தத்துக்கு முந்திய வரலாறும், யுத்த கால வரலாறும், யுத்தத்துக்கு பிந்திய வரலாறும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகின்றன. ஆகவே தான் ஒரு நிரந்தர தீர்வினை ஏற்படுத்து வதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச சமுகத்தை நாம் கோருகின்றோம். அதேபோல, இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது? ஏன் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு அவசியம் என்பவற்றை சிங்கள மக்கள் விளங்கிக் கொண்டு நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கு அவர்களும் ஒத் துழைக்கவேண்டும் என்பதற்காகவே சர்வதேச விசா ரணையை நாம் கோருகின்றோம்.

ஆகவே, தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்ற விதியை தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாக ஆவணி 5, 2020 திகதி அன்றைய நாடாளுமன்றத் தேர்தல் அமைகிறது. உங்கள் வாக்குகள் தான் அந்த விதியை எழுதப்போகின்றன. நீங்கள் எழுதும் விதி வடக்கு - கிழக்கில் 'மீனாட்சி' மலர்வதற்கானதாக இருக்கட்டும்.

அன்புக்குரிய மக்களே, வல்வெட்டித்துறை மண்ணில் இத்தனை நூற்றுக்கணக்கான உங்கள் முன் உரையாற்றும்பொழுது எனக்குள்ளே இருக்கும் வீர உணர்வும் விடுதலை உணர்வும் அதிகரித்திருப்பதாக உணர்கின்றேன். இந்த மண்ணுக்கு தனியான ஒரு வரலாறு இருக்கிறது. ஒரு மகிமை இருக்கின்றது. ஒரு புனிதம் இருக்கிறது. ஏராளமான சரித்திர வீரர்களை உருவாக்கிய மண் இந்த மண். இவர்களின் வீரத்தை, ஒழுக்கத்தை, கொள்கை உறுதியை தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்கள் கூட இன்றும் குறிப்பிடுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவர்களுக்கு எதிராகப் போரிட்ட இலங்கையின் உயர் இராணுவ தளபதிகள் கூட தமது மரியாதையை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். ஆகவே இந்த மண்ணில் இருந்து என் மக்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். தயவுசெய்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை இம்முறை பகிஷ்கரித்து எமது கட்சியான தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கு வாக்களியுங்கள். - என்றார்.

# நல்லூரானுக்கு கொடியேற்றம் இன்று....







வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை(25) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறும் மகோற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 18ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

படங்கள்: ஐ.சிவசாந்தன்
பிரபாகரன் டிலக்ஷன்





# சகல அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியருக்கு பல்வேறு சலுகைகள்

## அரசுத் தரப்பில் அறிவிப்பு

அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கு பல்வேறு சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச ஊழியர்களின் அனைத்து சம்பள பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதென அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் அனைத்து அரச ஊழியர்களினது சம்பளம் தொடர்பான பிரச்சினைகள் தேசிய சம்பள ஆணைக்குழுவின் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அனைத்து அரச ஊழியர்களுக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, ஓய்வூதியம் பெறுவோருக்கும் சலுகை வழங்கும் அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் அரச வைத்தியசாலைகளில் புதிய தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்தோடு, அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் அடங்கலாக 20 லட்சம் பேர் நன்மை அடைவதோடு, குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் 15 லட்சம் அரச ஊழியர்களுக்கும் பாரிய நன்மைகள் கிடைக்கும் என மேலும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரசியல் பழிவாங்கல்களுக்கே முதலிடம் வழங்கியது நல்லாட்சி

## அபிவிருத்திக்கு அல்ல என கடுமையாக மஹிந்த சாடல்

கொழும்பு, ஜூலை 25

"கடந்த நல்லாட்சி அரசு அபிவிருத்தி நிர்மாணப் பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. அரசியல் பழிவாங்கல்களுக்கே முன்னுரிமை வழங்கியது. எனவே, 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தையடுத்து இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திகள் எமது புதிய ஆட்சியில் முழுமைப்படுத்தப்படும்"



– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்த காலத்தில் கொழும்பு நகரை அழகுப்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சேரிப்புறங்கள் பெருமளவில் இல்லாதொழிக்கப்பட்டு பலர் முறையான குடியிருப்புக்களில் குடியமர்த்தப்பட்டார்கள். 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தையடுத்து இந்தத் திட்டங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன.

சேரிப்புறங்களை இல்லாதொழித்து மக்கள் பாதுகாப்பான முறையில் வாழ்வதற்கான குடியிருப்புக்கள் வழங்கப்படும். தலைநகரை அழகுபடுத்தும் ஜனாதிபதியின் திட்டம் புதிய அரசில் முழுமைப்படுத்தப்படும். அத்துடன் திண்மக்கழிவகற்றல் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும்.

நாங்கள் வகுத்த திட்டங்கள் முழுமைப்படுத்தியிருந்தால் துறைமுக நகர அபிவிருத்தி முழுமைப்படுத்தப்பட்டு மக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருக்கும். கடந்த அரசு அபிவிருத்தி நிர்மாணப் பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. அரசியல் பழிவாங்கல்களுக்கே முன்னுரிமை வழங்கியது. எனவே, இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திகள் எமது ஆட்சியில் முழுமைப்படுத்தப்படும் – என்றார்.

# மேடைகளில் பொய்யுரைப்பவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பாதீர்கள்!

## பரப்புரைக் கூட்டத்தில் திகாம்பரம் வேண்டுகோள்



சிலர் கூறுவது போல் தாத்தாவும், அப்பாவும் மலையகம் தொடர்பில் கனவு காணவில்லை. நாம்தான் கனவு கண்டோம். கண்ட கனவுகளை நிறைவேற்றியும் உள்ளோம். தேர்தல் மேடைகளில் பொய்யுரைப்பவர்களை நாடாளுமன்றம் அனுப்பினால் அவர்கள் மீண்டும் மீண்டும் பொய்யுரைக்கவே முற்படுவார்கள்.

– இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கினிகத்தேனை, கெனில்வத்தை தோட்டத்தில் நேற்று மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகம் தொடர்பில் நாமே கனவு கண்டோம். அந்தக் கனவுகளை நிறைவேற்றியுள்ளோம். எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கும் திட்டமிட்டுள்ளோம். ஆனால், தாத்தா கண்ட கனவு, அப்பா கண்ட கனவு என்று கூறி சிலர் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றார். தற்போது நோர்வூட்டுக்கு வந்து சென்றுள்ளார். ஆனால், இன்னும் ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றார்கள், ஏப்ரல் என்றார்கள், தற்போது ஆகஸ்ட் மாதமும் வரப்போகின்றது. ஆயிரம் ரூபா மட்டும் வரவேயில்லை. எனவே, பொய்யுரைப்பவர்களை நாடாளுமன்றம் அனுப்பினால் அவர்கள் மீண்டும், மீண்டும் பொய்யுரைக்கவே முற்படுவார்கள்.

எனவே, மக்களுக்குச் சேவைகளைச் செய்துள்ள நாம் அவற்றைச் சுட்டிக்காட்டி உரிமையுடனேயே வாக்குக் கேட்கின்றோம். பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் எமது சேவைகள் தொடரும். தமிழ் முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்கள் வெற்றி பெறுவார்கள். சலுகைகளுக்காகப் பேரம் பேசமாட்டோம். மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கவே பேரம் பேசுவோம் – என்றார்.

# கொழும்பு – கண்டி பஸ்ஸில் அமெ. பிரஜை திடீர் மரணம்

கொழும்பு, ஜூலை 25

கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸினுள் அமெரிக்கப் பிரஜை திடீரென உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அமெரிக்கப் பிரஜை நிட்டம்புவ - யக்கல பிரதேசத்தில் வைத்து பஸ்ஸில் ஏறியுள்ளார்.

இதனையடுத்து பஸ் நடத்துனருடனும் பஸ்ஸில் பயணித்த ஏனைய பயணிகள் பேசி வந்த நிலையில், திடீரென வெளிநாட்டுப் பிரஜை மரணித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்திவருவதோடு உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா இல்லையா என்ற பரிசோதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

# தெல்தெனியவில் தீப் பிடித்தது பஸ்

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று தீ விபத்திற்குள்ளானதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றிரவு 7.45 மணியளவில் தெல்தெனிய பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது உடனடியாக செயற்பட்ட பொலிஸாரும் கண்டி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இத்தீ விபத்தின்போது எவ்வித உயிர் ஆபத்துகளும் ஏற்படவில்லை. இத்தீ விபத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை.

இது தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வெளிநாடுகளில் சிக்கியுள்ள மக்களை அழைத்துவருவதற்கு உடன் நடவடிக்கை



## சம்பிக்க வலியுறுத்து

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்குண்டுள்ள உழைக்கும் மக்களை அழைத்துவருவதற்காக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் அனைவரையும் நாட்டுக்குள் அழைத்துவரும் வரையில் நாங்கள் போராட்டங்களை முன்னெடுப்போம்.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருமாறு கோரி வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு முன்பாக நேற்று ஐக்கிய மக்கள் சக்தியினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அந்நிய செலவாணியைப் பெற்றுக் கொடுக்கும் வெளிநாடுகளில் பணிபுரிந்து வரும் எம்நாட்டு மக்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசு எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே நாங்கள் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம். இந்த நாட்டைச்சேர்ந்த 15 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர். அவர்களை அழைத்து வருவதற்கு அரசு எந்த முயற்சிகளையும் எடுக்காமல் இருக்கின்றது.

ஆனால், அமைச்சர்களினதும் முன்னாள் எம்.பிக்களின் பிள்ளைகளையும், அவர்களின் சகாக்களின் பிள்ளைகளையும் அழைத்து வருவதற்கு மாத்திரம் விசேட விமானங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

அதேவேளை, ஆரம்பத் தில் அழைத்துவரப்பட்ட வெளிநாட்டு ஊழியர்களை ஆளும் தரப்பினர் கொரோனா வைரஸ் வெடிகுண்டுகள் என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் வெளிநாடுகளில் இருக்கும் இந்த நாட்டைச் சேர்ந்த 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தங்களை நாட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு தூதரகத்துக்கு அறிவித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்களில் 2 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது எனவும், 30 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. உடனடியாக அவர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராணுவப் போராளிகள், சுகாதாரப் போராளிகள், உழைக்கும் போராளிகள் போன்ற பட்டங்களை வழங்கி ஊடக சந்திப்புகளை நடத்தி வந்தாலும் இன்று இராணுவத்தினரே பெரிதும் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதார வீரர்களுக்கு இன்னமும் முதற்பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் தொடர்ந்தும் முயற்சிப்போம். அனைவரும் எமது போராட்டத்தில் கலந்துகொள்ளுங்கள் என்றே நாங்கள் மக்களுக்குத் தெரிவிக்கின்றோம் – என்றார்.

# தொல்பொருளியல் சட்டத்தை திருத்துவது குறித்து மகா சங்கத்தினருடன் ஜனாதிபதி விரிவாக ஆராய்வு



தொல்பொருள்களைஒ பாதுகாத்து தேசிய மரபுரிமைகளை உறுதி செய்வதற்காக தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை திருத்துவது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

இச்சட்டம் எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென்பது குறித்து ஆராய்வதற்கு மகா சங்கத்தினர், துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

நீண்டகாலமாக இடம்பெற்று வரும் தொல்பொருள் அழிவுகளை நிறுத்தி, நாட்டின் மரபுரிமைகளை எதிர்கால தலைமுறைக்கு வழங்குவதில் நடைமுறையில் எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பது இச்சட்டத்தைத் திருத்தவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி பௌத்த ஆலோசனை சபையின் 4ஆவது கூட்டத்தின் போது ஜனாதிபதி இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இக் கூட்டத்தில் தொல்பொருள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. எந்தவொரு புண்ணியஸ்தலத்தினதும் வரலாற்று மரபுரிமைகளுக்கு அல்லது தொல்பொருள் பெறுமானங்களுக்கு பாதிப்பு ஏற்பட ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டது என்பதுடன், அத்தகைய அனைத்து இடங்களும் தேசிய மரபுரிமைகளாக கருதப்பட்டு பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொல்பொருள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்து மகாசங்கத்தினர் முன்வைத்த முன்மொழிவுகளை விசேட செயலணியின் கவனத்திற்கு கொண்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்திற்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளை அதிகரிக்கவும் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் தொல்பொருள்களை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சிவில் பாதுகாப்பு படையணியின் உதவியை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொடர்பில் இருந்துவரும் வழக்குகளை கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு மகாசங்கத்தினர் முன்வைத்த கோரிக்கை குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

தொல்பொருள்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்குமாறு மகாசங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு உடனடியாக பதிலளிக்குமாறு ஜனாதிபதி அவர்கள் தொல்பொருள் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார்.

காலனித்துவ காலத்திலும் அதற்குப் பின்னரும் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருள்கள் பிரித்தானியா மற்றும் டென்மார்க்கின் கோப்பன் ஹேகன் தொல்பொருள் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன என மகாசங்கத்தினர் குறிப்பிட்டனர். யுனெஸ்கோ நிறுவனத்துடன் கலந்துரையாடி அவற்றை நாட்டுக்கு கொண்டு வருவதற்கும் தேரர்கள் முன்மொழிந்தனர்.

கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் தொல்பொருள்களுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் பாரிய சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன எனத் தேரர்கள் குறிப்பிட்டனர். விகாரைகளுக்கு சொந்தமான புண்ணிய பூமிகள் பல்வேறு தரப்பினரால் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த மரபுரிமைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தேரர்கள் தெரிவித்தனர்.

இரண்டு ஊழியர்களின் சேவை தேவைப்படும் இடத்திற்கு 15 பேர் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். குறித்த சேவைகள் தொடர்பில் அவர்களுக்கு எவ்விதமான அறிவும் இல்லை. அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு புறம்பாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் சம்பளத்திற்காக மத்திய கலாசார நிதியம் வருடாந்தம் எழு நூறு கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை 11 ஆகும். எனினும் இவ்வெற்றிடங்களுக்கு எந்தவொருவரும் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை என தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் செனரத் திசாநாயக்க தெரிவித்தார். அங்கீகரிக்கப்பட்ட உதவிப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை 38 ஆகும். எனினும் அதற்காக ஒருவர் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார். அத்தகைய நிலைமையில் திணைக்களத்தின் பணிகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாதென ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களிலிருந்து ஒரு வருடத்தில் சுமார் 80 பட்டதாரிகள் தொல்பொருள் விசேட பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர். தொல்பொருள் குறித்த நடைமுறை சார்ந்த அறிவை கொண்டுள்ளவர்களை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யுமாறு ஜனாதிபதி அவர்கள் பணிப்புரை விடுத்தார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும்போது தொல்பொருள் துறைசார்ந்தவர்களை சுகததாச விளையாட்டரங்கில் சேவை செய்வதற்காக நியமிக்கபட்டுள்ளனர். துறைசார் அறிவு உள்ளவர்களை குறித்து துறைகளில் ஈடுபடுத்துவதன் அவசியம் குறித்து ஜனாதிபதி அவர்கள் விளக்கினார்

புதையல் தோண்டும் கள்வர்களிடம் இருந்து தொல்பொருள்களுக்கு ஏற்படும் பாரதூரமான சேதங்கள் குறித்து தொல்பொருளியல் சக்கரவர்த்தி சங்கைக்குரிய எல்லாவல மேதானந்த தேரர் சுட்டிக்காட்டினார். தொல்பொருள்களில் இருந்த தங்கம், வெள்ளி, இரத்தினக் கற்கள் போன்று எந்தவொரு பெறுமதிவாய்ந்த பொருள்களும் எனது 65 வருடகால ஆய்வுக்காலப் பகுதியில் கிடைக்கப்பெறவில்லை.

எனவே தொல்பொருள்களை பாதுகாப்பதற்கு மக்களுக்கு சரியான அறிவை வழங்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். தொல்பொருள்கள் குறித்த ஆய்வு அறிக்கையை தயாரித்தல் மற்றும் வரைப்படங்களை தயாரிப்பது முக்கிய தேவையாகும். உரிய ஆய்வு வரலாற்றை திரிபுபடுத்தி கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேதானந்த தேரர் குறிப்பிட்டார்.

தொல்பொருள் கட்டளைச் சட்டம் திருத்தப்படுவதன் முக்கியத்துவம் குறித்து மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி தேரர் சுட்டிக்காட்டினார். தொல்பொருள் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்பும்போது துறைசார்ந்த அறிவுள்ளவர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்றும் தேரர் அவர்கள் குறிப்பிட்டார்.

காலனித்துவக் காலத்தில் தயாரிக்கப்பட்ட தொல்பொருள் சட்டத்தின் மூலம் தொல்பொருள்கள் குறித்து மட்டும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய திம்புல்கும்குரே விமல தம்ம நாயக்க தேரர் தேசிய மரபுரிகைள் மற்றும் சாசன வரலாற்றை பாதுகாக்கும் வகையில் அது திருத்தப்பட வேண்டுமென தெரிவித்தார்.

தொல்பொருள் சட்டத்தை திருத்தும்போது மகாசங்கத்தினர் ஆழமான ஆராய்ச்சி ஒன்றை மேற்கொள்வதன் அவசியத்தை அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய வெண்டருவே உபாலி நாயக்க தேரர் குறிப்பிட்டார். கலாசார அமைச்சுப் பொறுப்பு ஜனாதிபதி அல்லது பிரதமரின் கீழ் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார்.

தொல்பொருள்களை அழிவுக்குட்படுத்துபவர்களுக்கு அதனை சமயம் சார்ந்த ஒன்றல்லாது அது தேசிய மரபுரிமையாகும் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டுமென அமரபுர மகா நிக்காயவின் ஸ்ரீ தர்ம ரக்கித்த பீடத்தின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய திருக்குணாமலையே ஆனந்த தேரர் சுட்டிக்காட்டினார்.

ஏனைய சமயத்தவர்கள் மற்றும் தீவிரவாதிகளுக்கு மத்தியிலும் இதனை விளங்கிக்கொள்ளக்கூடிய கற்றவர்கள் இருப்பதால் தொல்பொருள்களின் பெறுமதிகளை சொல்லிக்கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தேரர் அவர்கள் விளக்கினார்.

சங்கைக்குரிய திவியகஹ யசஸசி தேரர் தொல்பொருள்களை பாதுகாப்பதற்கு முன்மொழிவுகளை முன்வைத்தார்.

ஜனாதிபதி தொல்பொருள்களை பாதுகாப்பது குறித்த புதிய எண்ணக்கருவொன்றினை சமூகத்திற்கு முன்வைத்துள்ளார். அதனை சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்திக்கொள்ள முடியுமென கோட்டே ஸ்ரீ கல்யானி சாமசிறி தர்ம மகாசங்க சபையின் அனுநாயக்க தேரர் பேராசிரியர் சங்கைக்குரிய கொட்டபிட்டியே ராகுல தேரர் தெரிவித்தார்.

குருநாகலையில் உள்ள புவனேகபாகு மன்னனின் ராஜ சபை உடைக்கப்பட்டுள்ளதாக முன்னெடுக்கப்படும் பிரச்சாரம் அரசியல் நோக்கம் கொண்டதாகும் என வடமேல் மாகாண தலைமை சங்கநாயக்கர் சங்கைக்குரிய ரெக்கவ ஜினரத்ன தேரர் தெரிவித்தார்.

மரத்தினால் ஆன இம்மண்டபம் நகர சபைக்கு சொந்தமானது எனக்கூறி புவனேபாகுவின் பெயரில் ஹோட்டல் ஒன்று நடாத்திச் செல்லப்பட்டிருக்கிறது. அதற்கான அனைத்து ஆவணங்களும் தன்னிடம் இருப்பதாக தேரர் அவர்கள் தெரிவித்தார். எனினும் புவனேகபாகு அரசர் இதனை நிர்மாணித்தார் என முன்னெடுக்கப்படும் பிரச்சாரத்தில் எவ்வித உண்மையும் இல்லை என தேரர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

## ஈரோஸின் விஞ்ஞாபனம் நாளை வெளியீடு

*யாழ்ப்பாணம், ஜூலை 25*

*ஈழவர் ஜனநாயக முன்னணியின் ஈரோஸின், தேர்தல் விஞ்ஞாபனம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு, இல.52, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள அதன் யாழ் மாவட்ட அலுவலகத்தில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.*

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஜூலை கூட்டம் செல்லுபடியற்றது

## வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்தக் கூட்டம் செல்லுபடியற்றது என வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்ட நிலையில் எதிர்வரும் 31ஆம் திகதி மீண்டும் மாதாந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம், 1947ஆம் ஆண்டின் 29இலக்க மாநகர சபை சட்டத்தின் அத்தியாயம் 252 பிரிவு 19இன் பிரகாரமும், 2016.02.02 திகதிய 1952/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2017.03.24ஆம் திகதிய 2017/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வடக்கு மாகாண சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட மாநகர சபையின் சபைக் கூட்டங்கள் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத் துணைவிதிகளின் 4(!!) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளிற்கு அமையவும் கூட்டப்படாத காரணத்தால் மேற்படி கூட்டத்தினையும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் வடக்கு மாகாண ஆளுநர் இரத்துச் செய்துள்ளார்.

இவ்வாறு ஜூலை மாதக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டமையினால்எதிர்வரும்31ஆம்திகதிமீண்டும்கூட்டம்இடம்பெறவுள்ளதாக செயலாளர்உறுப்பினர்களிற்குஅறிவித்தல்அனுப்பிவைத்துள்ளார்.

# கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவு கூர்கிறார் கனடியப் பிரதமர்



1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவு கூர்ந்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இன்று நாங்கள் இலங்கையில் கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற பயங்கரமான சம்பவங்களை நினைவு கூருவதுடன் பாதிக்கப்பட்டவர்களின் நினைவுகளை கௌரவிக்கின்றோம்.

பலவருடமாக அதிகரித்து வந்த பதற்றம் மற்றும் அமைதியின்மைக்கு பின்னர் 1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் கொழும்பின் பல பகுதிகளில் மூண்டது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமையுடன் எண்ணிலடங்காதவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த கலவரங்கள் 26 வருட ஆயுதமோதலுக்குக் காரணமாக அமைந்தன. இதன்போது பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிர்இழந்தனர்,சமூகங்கள் பெரும் பாதிப்பை சந்தித்தன, நிரந்தரமான உடல்ரீதியான உளரீதியான காயங்கள் ஏற்பட்டன.

இலங்கையில் வன்முறைகள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்குள்ளாகுபவர்களுக்கு அடைக்கலம் அளித்ததன் மூலம் கனடா இதற்கு பதில் நடவடிக்கையை எடுத்தது.

கறுப்பு ஜூலையின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடவடிக்கைகள் மூலம் 1800 தமிழர்கள் கனடாவில் மீள்குடியேறியமையுடன் தங்கள் வாழ்க்கையை மீள கட்டியெழுப்பினர்.சிறந்த நாட்டை உருவாக்க உதவினர்.

மிகப்பெரும் இழப்பு மற்றும் துன்பங்களின் மத்தியில் அவர்கள் வழங்கிய பங்களிப்பு வலுவான,மேலும் அனைவரையும் உள்வாங்கும்,கனடாவை உருவாக்க உதவியது.

கனடா உலகில் பெருமளவு புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடாக காணப்படுகின்றது.

கனடாவின் சார்பில் கறுப்பு ஜூலையின் போது துயரங்களை,அனுபவித்த தங்களின் நேசத்துக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் இலங்கையில் நிரந்தர நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கு வழிவகுக்ககூடிய பொறுப்புக்கூறும் பொறிமுறைறையை உருவாக்குவது குறித்து கனடா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்த இலக்கை நோக்கி பாடுபவர்களுக்கு நாங்கள் தொடர்ந்தும் எங்கள் ஆதரவை வழங்கி வருகின்றோம்

# எந்தச் சக்தியாலும் ஐ.தே.கவை ஒருபோதும் அழிக்கவே முடியாது

## ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டம்

**கொழும்பு, ஜூலை25**

**ஐக்கிய தேசியக் கட்சி அழிந்துபோய்விட்டது எனச் சிலர் கூறுகின்றனர். பண்டாரநாயக்கவும் கட்சியிலிருந்து விலகியபோது அவ்வாறுதான் கூறினார். இறுதியில் அவருடைய கட்சியினரே அவரைக் கொன்றுவிட்டார்கள். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இல்லாமல்போகாது; எந்தச் சக்தியாலும் எமது கட்சியை அழிக்க முடியாது.**

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெல்லவாய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

இம்முறை நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் மிகவும் வித்தியாசமானதொரு தேர்தலாகும். ஏனெனில் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் இடம்பெறும் தேர்தல் என்பதால் பாரிய பரப்புரைக் கூட்டங்களை நடத்த முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து சுமார் 9 மாத காலத்தின் பின்னரே மீண்டும் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கப் போகின்றார்கள். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாலும், அவரால் நியமிக்கப்பட்ட பிரதமர் மற்றும் அமைச்சரவையாலும் நாட்டில் திடீரென்று ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு முகங்கொடுக்க இயலாமல்போயுள்ளது.

ஆரம்பத்தில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எவருமில்லை என்று அரசு பொய்யுரைத்தது. அதன் பின்னர் தற்போதுவரை வைரஸ் தொற்றுக்குள்ளான சுமார் 2 ஆயிரத்து 700 இற்கும் அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இன்னும் சமூகத்தில் எத்தனை தொற்றாளர்கள் இருக்கின்றார்கள், எத்தனை பேர் அறிகுறிகளைக் கூறாமல் மறைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி எமக்குத் தெரியவில்லை.

அதேபோன்று இந்த நெருக்கடி ஏற்பட்டதும் மறுபக்கம் பொருளாதாரம் அதனை எதிர்கொள்ள முடியாமல் வெகுவாகத் தளம்பல் அடைந்திருக்கின்றது. இதனால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையிலான ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் எதனையும் அரசு நடைமுறைப்படுத்தவில்லை.

இத்தகையதொரு சூழ்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குச் சவாலாகக் களமிறங்கியிருக்கும் நாம் பொருளாதாரத்தை மீண்டும் சீரமைப்போம். எனவே, அதற்கான வாய்ப்பை ஒரு முறை எமக்கு வழங்குங்கள் என்றே மக்களிடம் கோருகின்றோம்.

எதிர்வரும் ஒன்றிரண்டு வருடங்களில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகளை மாத்திரமன்றி, அவற்றுக்கான செயற்றிட்டங்களையும் நாம் முன்வைத்திருக்கின்றோம்.

சிலர் தமக்கு இம்முறை எதிர்க்கட்சித் தலைமையைப் பெற்றுத்தருமாறும், அடுத்தமுறை ஆட்சியமைப்பதற்கு வாய்ப்புத்தருமாறும் மக்களிடம் கோருகின்றனர். ஆனால், நாட்டைப் பாதுகாப்பதற்காகவே டீ.எஸ்.சேனாநாயக்க ஐக்கிய தேசியக்



கட்சியை உருவாக்கினார். அந்த நோக்கத்தை முன்நிறுத்தியே ஆட்சியமைப்பதற்கான ஆணையை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். மக்கள் ஆணை வழங்கினால் அரசை அமைப்போம். அன்றேல் எதிரணியாக செயற்படுவோம்.

தற்போது இரண்டு ஐக்கிய தேசியக் கட்சி இருக்கின்றது எனவும் சிலர் கூறுகின்றனர். அதற்காக அனைத்து வகையான நீதிமன்றங்களுக்கும் சென்று, அதில் தோல்வியடைந்துவிட்டனர். இந்த விடயத்தில் அவர்கள் சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்வதாக இருந்தாலும்கூட, நாம் தடுக்கப்போவதில்லை.

கடவுச்சீட்டைப் பெற்றுத்தருவதற்கும் தயாராகவே இருக்கின்றோம். ஆனால், இறுதியாக வழமைபோன்று ஐக்கிய மக்கள் சக்தி என்பது அங்கீகரிக்கப்பட்ட தனியொரு கட்சி என்றும், அது ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணியல்ல என்றுமே தீர்ப்பு வழங்கப்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி என்பது டி.எஸ்.சேனாநாயக்க தொடக்கம் பல்வேறு மூத்த தலைவர்களினால் வழிநடத்தப்பட்ட நீண்ட பாரம்பரியத்தையுடைய கட்சியாகும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது அதன் ஓரங்கம் அல்ல. அது மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி போன்று வேறொரு தனியான கட்சியாகும். எனவே, அவர்கள் சிறிகொத்தாவுக்கு வந்தால் நான் அவர்களைப் பொலிஸாரிடம்தான் கையளிப்பேன்.

எனவே, எவரும் இரண்டு கட்சிகளிலும் அங்கம் வகிக்க முடியாது. நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்று இங்கிருக்கலாம். இல்லாவிட்டால் வேறு கட்சிக்குச் செல்லலாம். ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாமல் செய்வதைத் தமது நோக்கமாகக் கொண்டவர்கள் வேறு கட்சியில் இணையவோ அல்லது வேறு கட்சிக்கு ஆதரவளிக்கவோ முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி அழிந்துபோய்விட்டது எனவும் சிலர் கூறுகின்றனர். பண்டாரநாயக்கவும் கட்சியிலிருந்து விலகியபோது அவ்வாறுதான் கூறினார். இறுதியில் அவருடைய கட்சியினரே அவரைக் கொன்றுவிட்டார்கள். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இல்லாமல்போகாது; எந்தச் சக்தியாலும் எமது கட்சியை அழிக்க முடியாது. – என்றார்.

# ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் தேர்தல் முடிந்ததும்!

## சேருவலப் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் அறிவிப்பு



தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய ஒரு லட்சம் வேலை வாய்ப்புகளை வழங்கும் வேலைத் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்த நேரிட்டாலும் தேர்தல் முடிந்தவுடன் அந்த வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சேருவலப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் என்ன செய்தது என்று மக்கள் கேட்கின்றனர். ஐந்தாண்டுகளாக அவர்கள் நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு அமைய இன பேதமின்றி நாட்டை அபிவிருத்தி செய்ய அர்ப்பணிப்புடன் இருக்கும் சிலர் நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் ஆட்சியமைக்க உள்ள பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தின் கீழ் கமத்தொழிலை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கமத் தொழிலாளர்களின் ஓய்வூதியம், காப்புறுதி என்பவற்றை மேலும் வலுப்படுத்துவோம்.

திருகோணமலை என்பது எமது நாட்டின் பால் தேவையை 70 முதல் 80 வீதம் வரை பூர்த்தி செய்யக் கூடிய மாவட்டம்.

இதனால், பிரதேசத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்த புதிய நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது மாத்திரமின்றி புதிய மேய்ச்சல் நிலங்களை ஒதுக்கும் வேலைத்திட்டங்கள் தயாராக உள்ளன.

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு துரிதமாக புதிய முதலீட்டாளரை கண்டறிவோம். அல்லது அரச நிறுவனமாக அதனை முன்னெடுத்துச் செல்வோம் எனவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2020 இல் வெளியிடப்பெற்றது.